"கொடுமைக்குள்ளாயினும் கொள்கையைக் கைவிடோம்!"

Phone No. 450 — Regd. No. M. 5458

தனிப் பிரதி ஒரு அணா — இணைப்பு 10

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (30—4—50) வெளியூர் (1—5—50) [இதழ் 240

சட்டத்தின் துணைகொண்டு கம்யூனிஸத்தை அழிக்க முடியாது

—(0)—

சீரிய கொள்கைகளைச் சிறைச்சாலை என்ன செய்யும்?

—(0)—

ஆஸ்திரேலிய கம்யூனிஸ்டு தலைவரின் கருத்துரைகள்

"சட்டத்தின் துணைகொண்டு கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டபோதிலும், கட்சியின் வேலை நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கும். எப்படிப்பட்ட நிலைமையையும் சமாளிக்கும் சக்தி கம்யூனிஸ்டு கட்சிக்கு உண்டு. பயமுறுத்தலும், சிறைக்கனுப்பப்படுதலும் கம்யூனிஸ்டுகளின் தொண்டை தடை செய்ய இயலா. அவர்கள் சில பணிகளுக்கென தம்மை அர்ப்பணித்துவிட்டவர்கள். அப்படிப்பட்டவர்களை அடக்கிவிடுவதால், கம்யூனிசம் அடங்கிவிடாது. கம்யூனிஸ்டு கட்சியைத் தடைசெய்ய அல்லது கலைத்துவிட சட்டம் செய்வது வேறு, கம்யூனிசத்தை அழிப்பது வேறு."

இது, ஆஸ்திரேலிய கம்யூனிஸ்டு கட்சித்தலைவர் தோழர் ரிச்சார்ட் டிக்ஸன், ஆஸ்திரேலிய அரசாங்கம் கம்யூனிஸ்டு கட்சியை சட்டவிரோதமானதென்று சட்டம் செய்யப்போவது குறித்து வெளியிட்டுள்ள கருத்து.

சட்டம் அதற்குரிய பலனைத் தரவேண்டுமானால், சட்டம் செய்வதற்கு முன், நாட்டு நிலையினை நன்கு ஆராய்ந்தறிந்து, மக்களின் தேவை இன்னதென்பதை உணர்ந்து, அந்தத் தேவையின் பூர்த்தி செய்யப்பட வழிவகைகள் காணப்படல் வேண்டும். இதைவிடுத்து, தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பூர்த்தி செய்ய முயலாதவரையில் சட்டத்தின் துணைதேடுவது பைத்தியக்காரத்தனம், இது புண்ணை ஆற்ற வழி தேடுவதை விடுத்து, மூடி வைத்து அதனைப் புரையோடும் புண்ணாகச் செய்வதினையே ஒக்கும்.

தேவையை நாடி அலைவது உயிர்களின் இயற்கைப்பண்பு. அப்பண்பினை மாற்றவோ, அழிக்கவோ கூடிய சக்தி ஏதும் உலகில் இருக்க முடியாது. அப்படிப்பட்ட மகத்தான சக்தி வாய்ந்த பண்பை அடிப்படையாகக் கொண்டதுதான் கம்யூனிசம். அதனை அழித்து விடலாம் என்ற எண்ணத்தோடு முதலாளித்துவ நாடுகள் பல சட்டங்கள் இயற்றி வருகின்றன, அந்தச்சட்டங்களை நிறைவேற்ற துப்பாக்கி, சிறை தடியடி, இன்னபிறவற்றைத் துணை தேடி அலைகின்றன எனினும் அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி உலக மக்களின் இயக்கங்களைத் தொட்டுவருகிறது, கம்யூனிசம்.

எனவேதான் "கம்யூனிஸ்டு கட்சியை ஒழிப்பது வேறு, கம்யூனிசத்தை ஒழிப்பது வேறு" என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார் தோழர் ரிச்சார்ட் டிக்ஸன். அதுமட்டுமல்ல; "சிறைச்சாலை என்ன செய்யும்?" என்றும் தட்டிக்கேட்கிறார்.

தோழர் டிக்ஸனின் கருத்துரைக்கு ஏற்ப இந்தோனேஷியாவில் போராட்டம், இந்தோ சீனாவில் எழுச்சி, மலேயாவில் கலகம், பர்மாவில் பயங்கர நிலை என்று கிழக்காசிய நாடுகள் எங்கும் கொந்தளிப்பு வளர்ந்து வருகிறது மக்களின் மனத்திலே ஒருவித புத்துணர்ச்சி—தோள்களில் தினவு—கண்களில் தீப்பொறி, கருத்திலே புரட்சி தோன்றியவண்ணமிருக்கிறது. இந்தப் புரட்சிப்புயலின் வேகம்தான் இன்று ஆஸ்திரேலியாவை அசைத்துப் பார்க்கிறது.

எனவே, இத்தகைய உலக சூழ்நிலையைச் சற்றுக் கவனித்து ஆணவம், அறியாமை, ஆகியவற்றை விலக்கி, தடியடி, சிறை, துப்பாக்கி ஆகியவற்றில் வைத்திருக்கும் நம்பிக்கையைவிட்டு, நல்லறிவு, ஜனநாயகம் ஆகியவற்றைத் துணைகொண்டு ஆவன செய்யவேண்டும் என்று பொதுவாக அதிகாரவர்க்கங்கள் அனைத்துக்கும் அறிவுறுத்த விரும்புகிறோம்.

இரத்தம் கொதிப்பேறும் முன்பே!

செகபுதல் கேட்பீர்!—இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்
பலர் ஆதலின்,

சுப்பல்களாக—இனித்
தொழும்பர்களாக மதித்திட
வேண்டாம்!

இப்பொழுதே நீர்—பொது
இன்பம் விளைந்திட உங்களின்
சொத்தை

ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில்இரத்தம் கொதிப்பேறு
முன்பே

(ஒப்படைப்பீரே!)

—புரட்சிக்கவிஞர்



சேலம் பொன்னம்மாபேட்டை திராவிட முன்னேற்றக் கழகக் கட்டடத் திறப்பு விழாக் கூட்டத்தில் தோழர் சி. என். அ. அவர்கள் சொற்பொழிவாற்றுங் காட்சி

நோபெல் பரிசு பெற்றவருக்கு பிரான்ஸ் தந்த "பரிசு"

—(0)—

அணுசக்தி அறிஞர் 'ஜூலியட்க்யூரி' டிஸ்மிஸ்

—(0)—

புரட்சிவீரன்பிறந்தநாடு டாலரின்ரூ ஸோகையாளாகிவிட்டது!

'நீ ஒரு கம்யூனிஸ்டு, ஆகையால் நீ அரசாங்க வேலையில் இருக்க முடியாது' என்று கூறி, பிரபல அணுசக்தி ஆராய்ச்சி வல்லுனர் பேராசிரியர் ப்ரெடரிக் ஜூலியட் க்யூரி, பிரெஞ்சு அரசாங்கத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார். இவர் பிரெஞ்சு அணுசக்தி ஆராய்ச்சிக் கமிஷனர் பதவி வகித்து வந்தார்.

50 வயதுள்ள தோழர்க்யூரி செய்த குற்றம் சென்ற நவம்பரில்மாஸ்கோவுக்குச்சென்று அங்கே மூன்று வாரங்கள் தங்கி இருந்ததேயாகும். கம்யூனிஸ்டுகளை முக்கியமான பதவிகளிலிருந்து அப்புறப்படுத்த பிரெஞ்சு இடது சாரியினர் முழு மூச்சுடன் வேலை செய்து வருகிறார்களாம்.

உலகப் பிரசித்திபெற்ற பரமாணு விஞ்ஞானநிபுணராகிய இவருடைய மனைவி தோழியர் ஜூலியட் க்யூரி சென்ற மார்ச்சு48ல்அமெரிக்காவுக்குப் போன போது பாதுகாப்பு காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டார். பலத்த எதிர்ப்புகளுக்குப்பின், அமெரிக்க சர்க்கார் அவ்வம்மையாரை விடுதலை செய்தது.

ஒரு கம்யூனிஸ்டுபோல் பலமுறை தோழர் ப்ரெடரிக் க்யூரி நடந்துகொண்டதே டிஸ்மிஸ்செய்யப்பட்டதற்கு காரணமென்று பிரெஞ்சு பிரதமர் பிடால்ட் அறிவிக்கிறார்.

தோழர் ப்ரெட்ரிக்க்யூரியும் அவருடைய மனைவியார் "மேடம் க்யூரி"யும் ஒன்று மின்சார அலைகள் ஆராய்ச்சி நடத்தியதற்காக 1935-ல் நோபல் பரிசு பெற்றிருக்கிறார்கள்.

அட்லி மெஜாரிட்டி'யுடன் அட்டகாசம்

க்யூரி தம்பதிகள்-நோபெல் பரிசுபெற்ற அறிஞர்கள். அவரைக் கல்வியறிவு படைத்த உலகத்தில் அறிந்து கொள்ளாத ஆளே கிடையாது. விஞ்ஞானத்தில் காணுவதைக் கண்டறிந்த மாது எல்லாம் எல்லோருக்குமே சொந்தம் என்னும் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர் என்ற காரணத்தால், டாலர் முதலாளி நாடாகிய அமெரிக்காவில் நுழைந்தவுடன் சிறை

டார்டனில்ஸ் பாதுகாப்பு

—

ரஷியாவின் கோரிக்கைக்கு மறுப்பு

வாஷிங்டன், ஏப். 27—
கருங்கடலின் முகத்துவாரத்திலுள்ள டார்டனில்ஸ் ரஷியா துருக்கியின் கூட்டுப் பாதுகாப்புக்குட்பட்டிருக்கவேண்டுமென அது ரஷியா கேட்டுக்கொண்டதைத் துருக்கி மறுத்துவிட்டது. இச்செய்திஅமெரிக்காவிலுள்ள துருக்கி நாட்டு ஸ்தானீகர் வாஷிங்டனில் அறிவித்தார்.

டார்டனில்ஸ் பல யுத்தங்களுக்குக் காரணமாக இருந்த இடம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

அங்கு நாடகம் - இங்கு நடப்பு

ஆ. ல. நாராயணன்

"கண்களைப் பொசுக்கப் போகிறாயா! அரசன் வழிப் பிறந்து அருமையாக வாழ்ந்தவன் அனாதையாய் அலறிக்கொண்டிருக்கிறேனே, கருணை யில்லையா உனக்கு? சூடேற்றப்பட்ட இரும்புக்கம்பிகளைச் செலுத்தப் போகிறாயே, சிந்தித்தாயா நீ செய்யும் செயல் நேர்மையா என்று."

"சீ! பேசாதே! ஆணையிட்டான் அரசனிருக்க, அடிபணிய வேண்டியவன் நான். அது என் கடமை."

"கடமை! நல்ல கடமை. அன்று ஒருநாள், நீ தலைவலியால் அவதிப்பட்டபோது, அரசன் மகன் எனும் அந்தஸ்தையும் மறந்து, உனக்கு உதவி செய்தேன், எனக்குக் கைம்மாறு இது? என் கண்களினின்றும் கசியும் கண்ணீர்—என் துடிக்கும் இதழ்கள், வாழ்வின் முதல் படியிலுள்ள என் பருவம் பயனுறவேண்டிய என் பிறப்பு. இவைகளைக் கண்டபிறகுமா உனக்குக் கல்நெஞ்சம்? கொடிக் பொழுதிலே நாசம் செய்ய முற்பட்டு விட்டாயே என் வாழ்வை! துரோகி!"

* * *

"உலகமெலாம் மறைசாற்றி உலவி வந்தேன். என்னிலும் இன்னியலாள் எவருமில்லை என்பாரே என்னைப் புகழ்ந்தது, என் அழகைக் கண்டு அநேகர் என் இருப்பிடத்தையடைந்து, என் வரலாற்றை உணர்ந்து சென்றனர். கண்ணும் திருக்குறளைக் கண்டு காதலுற்றோர் பலர்; அதனைக் கவியாகப் பாடியுள்ளனர் பல மொழிகளில். செவ்விதழ் சிலப்பதிகாரத்தைக் கண்டு சொக்காதார் யார்? அழகு காதுகள் அகநானூறு, புறநானூறு; கூந்தல் குறுந்தொகை முதலியவற்றைக் கண்டு மனம் நந்தார் மக்கள்."

"என் புகழைக்கண்டு பொறாமையுற்ற சிலர் என் முகுடத்துக்கு வடமொழிச் சாயத்தைப் பூசினர். அழகை அதிகப்படுத்துவதாக எண்ணினர். ஆனால் அழகிழந்தேன்; அதோடு என் புகழும் அழிந்தது."

"என் நிலையைக் கண்ட பலர் என்னை ஆதரிக்க முற்பட்டனர். பூசப்பட்ட பூச்சை நீக்கினர். கண்ணும், காதும், மூக்கும் உணர்ந்தனர். பழைய நிலைக்கு என்னைக் கொணர முற்பட்டனர் முயற்சியும் நடந்து வருகிறது."

"அருமையாக வாழ்ந்தவள் அழகிழந்தேன் ஆரிய அடிவருடிகளால். புகழிழந்தேன் பொறாமையாளரால். நாசமாக்கப்பட்டேன் நயவஞ்சகரால். சிறப்பாக வாழ்ந்தவள் சீரழிக்கப்பட்டேனென சிந்திக்கும் சிலர் சீர்திருத்த முற்பட்டோர்கள் என்னை செதுக்குகிறார் என் மேலெழுந்த மாசை, சிதைக்கிறாய் நீ அவர்களைக் கண்டு, அழகையும், புகழையும் குலைக்க கட்டி கட்டுகிறாய் அடக்குமுறை அம்பை வீசுகிறாய். கையிலே "விஷ இந்தியை" வைத்துக்கொண்டு என்னைக் கொல்ல முற்படுகிறாய். உன்னாட்டிலே பிறந்து, கவிஞர்களால் காப்பாற்றப்பட்டு; உன்னோர்களால் போற்றப்பட்டு. "திருக்குறளை அறமெனக் கொண்ட தமிழன்" என்று உன்னை உலகம் கொண்டாடச் செய்த—உன்னை உயர்த்தியவளைக் கொலை செய்கிறாய்"

* * *

முதல் காட்சி—ஆங்கில நாட்டிலே பிறந்து, உலக மகாகவி ஷேக்ஸ்பியர் எனப் பட்டம் பெற்றவருடைய "ஜான் மன்னன்" எனும் நாடகத்தில் ஒரு அங்கம்.

பட்டத்துக்குரிய பிள்ளை ஆர்தரைசிறையிலடைத்து, அரசைக் கைப்பற்ற முற்பட்டான் ஜான் (ஆர்தரின் சிற்றப்பன். ஆர்தருக்குரிமை பிரதிநிதியாக ஆள்பவன்) இளவரசன் உயிரோடு வாழ்ந்தால் நாடு அவனைச் சேரும், ஊரார் அவனுக்கு உதவி செய்வர் என நினைத்து, ஹியூபர்ட் எனும் வீரனை விட்டு அவன் கண்களைக் குத்தச் செய்கிறான். பழுக்கக் காய்ச்சிய இரும்புகளைக் கண்ட ஆர்தர் கலங்குகிறான், கதறுகிறான், உதறுகிறான் தான் இருந்த நிலையை. தன்னால் ஹியூபர்ட் அடைந்த தனியும், உயர்வும் பெருமையை அவனுக்கு உணர்த்துகிறான்.

ஆர்தரின் பேச்சு, அவனுடைய அபூர்வதம் ஹியூபர்ட்டின் மனதைக் கலைக்கிறது. காய்ச்சிய இரும்பு அணைகிறது. ஹியூபர்ட் வைத்திருந்த துரோக நோக்கம் அணைகிறது. அது அங்கு நாடகம்.

* * *

இரண்டாவது காட்சி—கட்டாய முறையில் புகுத்தப்பட்டுள்ள இந்தி சென்னை ஆட்சியினில். தன் தொன்மையும், புகழையும் பொசுக்கும் பின்மையில் நிற்கும் அமைச்சர்களைக் கண்டு தமிழன்னை கதறுகிறாள். உலகிலே உயர்வாகப் போற்றப்பட்டவள், தன்னகத்தே திருக்குறளைக் கொண்டவள், கதறுகிறாள். தன்னால் உயர்ந்தவர் தன்னையே தாழ்த்துவதைக் கண்டு குமுறுகிறாள். தன், பழம் வாழ்வைப் படமாக்கிக் காட்டுகிறாள்.

அங்கு கண்களை இழக்கப் போகும் ஆர்தர்—இங்கு தன் அழகை இழக்கப் போகும் தமிழன்னை. அங்கு சமூகக் காய்ச்சிய இரும்பு—இங்கு காய்ச்சிய இரும்பினும் கொடிய இந்தி அங்கு கொலைபாதகச் சிறையில் கிடக்கும் ஹியூபர்ட்—இங்கு அதே பிணியில் சென்னை அமைச்சர்கள்—அங்கு ஆர்தரின் கண்களைப் பொசுக்கும்படி அரசனின் ஆணை. இங்கு கட்டாய முறையில் புகுத்தும்படி மத்திய சர்க்காரின் ஆணை.

அங்கு கற்பனை-இங்கு-காட்சி. அங்கு நாடகம்-இங்கு நடப்பு.

ஆனால் ஒரே ஒரு மாறுபாடு அங்கு ஹியூபர்ட் இருதயமுள்ளவனாக இருக்கிறான். சிந்திக்கும் திறனுடையவனாக இருக்கிறான். ஆர்தரின் நிலையையும், அதனால் நாடு நலம் பெறும் என்பதையும் ஆய்ந்து அவனைக் கொல்லாமல் விடுகிறான். தமது தவறை நினைத்து கண்ணீரும் விடுகிறான் அரசன் ஆணைக்கும் அஞ்சாமல்.

ஆனால் இங்கே—ஆட்சியாளர்களுக்கு இதயமுண்டா! சிந்திக்கும் திறனுண்டா! தன்னை வளர்த்த மொழி! தன்னைப் பெற்ற தாய். இதனை நினைத்து மத்திய சர்க்காரின் மிரட்டுதலுக்கு அஞ்சாமல் தமிழன்னையைக் காப்பாற்றுவார்களா !

சுதந்திரம் ஏலம் போடப்படுகிறது

★

"அரசு, அமைதியாக, நிரந்தரமானதாக நிலைபெற வேண்டுமானால், மிதமிஞ்சிய செல்வமும், மிதமிஞ்சிய ஏழ்மையும் இருத்தலாகாது; அதாவது பணக்காரன் இருக்கக் கூடாது. ஏழைகளும் இருக்கக்கூடாது ஏனெனில், இருவரும் பொதுஜன நன்மைக்கு விரோதமானவர்கள், பணக்காரர்கள், கொடுங்கோலர்கள்; ஏழைகள் அந்தக் கொடுங்கோலர்களுக்கு நண்பர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டுபேர்களுக்கும் மத்தியில் தான், பொதுஜன சுதந்திரமென்பது ஏலம் போடப்படுகிறது. ஒரு சாரார், அதாவது பணக்காரர்கள் அதனை வாங்குகிறார்கள்; இன்னொரு சாரார், அதாவது ஏழைகள் அதனை விற்கிறார்கள்.

—ரூசோ

காட்டைப் பாதுகாக்க மாணவர்கள்

லண்டன், ஏப் 29—

வெர்க்ஷயா, ஹாம்ஷயர் காடுகளில் யாரும் தீ வைத்துவிடாதபடி பாதுகாக்க மாணவர்கள் காவல்புரியவிருக்கின்றனர்.

காட்டில் ஒரு பகுதியில் உள்ள மரங்கள் மட்டும் ரூபாய் 39,000,000 பெறுமாம்.

பெண்களின் வாலிப நிலை

லண்டன், ஏப். 29—

டாக்டர் ஆல்பிரட்கின்ஸி, தான் எழுதியுள்ள புத்தகம் ஒன்றில், வாலிப முறுக்கின் உச்சநிலை பெண்களுக்கு 29 வயதில்தான் ஏற்படுகிறதென்றும், ஆனால் ஆண்களுக்கு உச்சநிலை 20 வயதிற்குள்ளேயே ஏற்பட்டுவிடுகிறதென்றும் எழுதியிருக்கிறார். (ரூனோம்)

ரோமுக்கு தூது கோஷ்டி

ஜெருசலம், ஏப். 29—

ஜெருசலத்தின் அரபு பகுதிக்கு ரேஸ்கேஸை வரும்படி சேர்வதற்காக, அரபு ரேஸ்ட் தூது கோஷ்டி சீக்கிரமே ரோமுக்குச் செல்லவிருக்கிறது.

மே தினத்தில் ஐவர்!

[சுப்பு. ஆறுமுகம்]

உழவன்

சோறில்லை உதவிசெய் வாரில்லை உழைத்தாலும் பேறில்லை
ஊரில்லை தங்க இடம் வேறில்லை எனைப்புகழ தாரில்லை
நீரில்லை கையிற்புது ஏரில்லை இவையிருப்பின் போரில்லை
ஓர்எல்லை வரும்வரையில் சீரில்லை புரட்சிசெய்ய யாரில்லை ?

தொழிலாளி

அறம்எங்கே கேட்டசுதந்திரம் எங்கே பைந்தமிழென் மறம் [எங்கே?
உரம்எங்கே அதைத்தந்த கரம்இங்கே உழைத்தான் தரம் [எங்கே?
குறை இங்கே கூறினேன் சிறை அங்கே வந்தெனில முறை [எங்கே?
கறைஇங்கே செய்திடுபவரை எங்கே என்பசிக் கிரைஅவரே !

பணக்காரன்

பார்த்தேன் பலவழியில் சேர்த்தேன் இரவுபகல் காத்தேன்,
பார்த்தோர் பட்டினிப்படை சேர்த்தார் பகைத்தோடுயிர் நீத் [தார் !
பாரில் ஏழைகள் பணக் காரர் இருவர்க் குள்ளே போராம் !
கூர்வேல் கொண்டுள்ளஎன்னைப் பார்மேல் எப்போவது [யாராம் ?

கள்ளச்சந்தை வாணிகன்

தூங்கினர் பலசாமான் வாங்கினேன் அதனால்மே லோங்கி [னேன்
தாங்கினர் எதிரிகள்பின் வாங்கினர் அந்தபயத்தை நீங்கினேன்
பாங்குள பொருள்கள் இல்லை ஓங்கவே பணமும்வந்து தேங்கின
யாங்கனும் என்னுயிரை வாங்கவே பேச்சுஏதும் வாங்கவோ ?

சீர்திருத்தவாதி

இன்னல் எதிர்வரினும் என்னைநான் எண்ணிடாது
என்நாடு இன்பமுற எண்ணிஉண்மை சண்டேன்
சொன்னால் சிறைவைக்கும், செய்தால்சிரம் கொய்யும்
சொந்தநாட்டின் செயலை சிந்தித்தேன், நோகுதம்மா !

சிட்னி காமன்வெல்த் மாநாடு

(0)

ஸ்டர்லிங் பிரச்னையை யோசிக்காது

லண்டன், ஏப். 28—

மே 15-ந் தேதியன்று சிட்னியில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மகாநாட்டில். விவசாய அபிவிருத்தி விஷயமாகவும், உணவு உற்பத்தி, கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாகவும் முக்ய சிரத்தை காட்டப்படும் எனத் தெரிகிறது.

எல்லா காமன்வெல்த் நாடுகளின் முக்யநோக்கமே அதனதன் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதேதான் என்றும். ஆகவே, பொருளாதார விஷயமாகவே முக்ய விவாதம் இருக்கும் என்றும் கருதப்படுகிறது.

சென்னை மூன்று வருஷகாலமாக விவசாய அபிவிருத்தித் துறையில் இந்தியா செய்துள்ள ஜமீன் ஒழிப்புபோன்ற வேலைகளை காமன்வெல்த் மிகவும் பாராட்டியிருக்கிறது.

விவசாய அபிவிருத்திவிஷயமாக இந்தியா இன்னும் உத்தேசித்துள்ளதிட்டங்களையும், சிட்னி மாநாட்டில் வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டில் ஸ்டர்லிங் சம்பந்தமான பிரச்னைகள் ஏதும் வராதென்றே கூறப்படுகிறது.

இப்பொழுதுள்ள வசதிகளைக் கொண்டு, தென்கிழக்கு ஆசியாவில் எப்படி பொருளாதார அபிவிருத்தியைச் செய்வது அமெரிக்காவில் உதவி கிடைக்கும்போது அதை எந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது என்றஇவ்விரண்டு திட்டம் பற்றியும் இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

டாலர் உதவி கிடைப்பதாக இருந்தால் அமெரிக்கா அதற்காக எவ்வித உள்நோக்கத்தையும் கொண்டு செய்யலாகாதென்று இம்மாநாடு திட்டமாகக்கூறி விடும் என்று தெரிகிறது.

கோஷ்டிகளில் சேர முடியாது

அமெரிக்காவினிடமிருந்து டாலர் உதவி கிடைப்பதற்குப் பதிலாக அதன் கோஷ்டியில் சேர்ந்துகொள்ள வேண்டும் என்றால், அதன் உதவியே தென்கிழக்கு ஆசியாவுக்கு வேண்டாம் என்பதை சிட்னி மாநாட்டில் கலந்துகொள்ளும் இந்தியப் பிரதிநிதிகள், மிகவும் தெளிவாகத் தெரிவித்துவிடுவாரென்று கூறப்படுகிறது.

ஸிரியாவில் யூகோ அகதிகள்

டமாஸ்கஸ், ஏப். 29—

ஸிரியாவில் இப்பொழுது வசிக்கும் யூகோ அரபிய அகதிகளின் ஜாபிதாவைத் தரும்படி, அங்காராவிலுள்ள ஸிரியஸ்தானீகாலயம் ஸிரிய சர்க்காரை கேட்டிருக்கிறது. இவர்களை யூகோ திரும்பும்படி செய்ய முயற்சி செய்யப்போவதாகத் தெரிகிறது. (ரூனோம்)

எவரின்தோள்கள்?

"சிற்றூரும், வரப்பெடுத்த
வயலும், ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும்,
வகைப்படுத்தி
நெற்சேர் உழுதுழுது பயன்
விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்"?

உழவர் உலகில்...?

புறம்போக்கு நிலத்தில் குடிசைகளின் கதி:

—————(0)—————

13 குடிசைகள் பிரிக்கப்பட்டுவிட்டன

மாயூரம் தாலுகா விவசாயத் தொழிலாளர் காங்கிரஸ் மத்திய சங்கக் காரியதரிசி தோழர் டி. சின்னதுரை கீழ்க்காணும் அறிக்கையைவிடுத்துள்ளார்.

மாயூரம் தாலுகா திருவாளப்புத்தூர் என்ற கிராமத்தில் வீடில்லாத ஏழை ஹரிஜனங்கள் திருவாளப்புத்தூர் செட்டில்மெண்ட் ரீசர்வே நம்பர், 301ல் உள்ள புறம்போக்கு குளைக்காடு அடர்ந்துள்ள குளத்தமேட்டில் காடுகளை அழித்து சுத்தம்செய்து 13 ஹரிஜனங்கள் கூரை குடிசை கட்டி அந்தந்த வீட்டின் சுற்றுப்புறமுள்ள விஸ்தீரணத்தில் கத்தரி, மிளகாய், முதலிய புஞ்சை மகசூல் செய்யப்பட்டு அந்த மகசூலின் வருமானம் ஜீவனத்திற்கு ஓரளவு ஒத்தாசையாகவும் இருந்து குடியிருந்து வந்தார்கள். அதன் பின்னர் அந்தஸ்தலத்தில் வீடுகள் கட்டி மகசூல்கள்செய்யப்பட்டிருப்பது ஆக்கிரமிப்பு என்று சென்னைப் பட்டணம் 1905 வருடத்திய 3-வது ஆக்டைச் சேர்ந்த 7-வது பிரிவின்படிக்கான பி. எம். நோட்டீசு சர்வ் செய்யப்பட்டது.

சென்னை சர்க்கார் ஜி. ஓ. 327, 22-3-49ல் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அறிக்கை சுருக்கமாவது :—

தஞ்சாவூர் ஜில்லாவில் நிலமில்லா ஏழை விவசாயிகளுக்கு குடியிருப்புக்கு வீடு கட்டிக் கொள்ள எங்கெங்கு சர்க்கார் புறம்போக்கு வசதியாக இருக்கிறதோ, அந்த இடங்களில் வீடுகட்டிக்கொள்ளலாம் என்று அறிக்கை கூறுகிறது. இதை ஆதாரமாகக்கொண்டுதான் வீடு கட்டப்பட்டதென்று 14-10-49ல் மனுக்கள் மூலம் தாசில்தாருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் அந்தஸ்தலத்தில் வீடு கட்டி மகசூல்கள் செய்யப்பட்டிருப்பது 1905 வருடத்து 3-வது ஆக்ட்டு 6-வது பிரிவின்படி அனுமதியற்ற ஆக்ரமிப்பு என்று வீடுகளையும், மகசூல்களை 1 வாரத்தில் காலிசெய்து நீடு பூமியை சர்க்கார் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று மாயூரம் ஆர். டி. ஓ 23-2-50 13 நபருக்கும் பி. எம். நோட்டீஸ் சர்வ்செய்யப்பட்டது.

பி. எம். நோட்டீஸின்பேரில் தஞ்சை ஜில்லா கலெக்டருக்கு 2—3—50 ல் தாக்கல்செய்து 22-3-50ல் சர்க்கார் அறிக்கைப்படி பி. எம். நோட்டீஸ் நடவடிக்கையை நிறுத்திவைக்கக் கோரப்பட்டது. கவனிக்கப்படுமென்று ஜில்லா கலெக்டர் உத்தரவு. ஜில்லா கலெக்டரிடம் அப்பீல் செய்துள்ளதை பிரஸ்தாபப்படுத்தி 2-3-50 மாயூரம் ஆர். டி. ஓ. விடம் ஒரு மனு தாக்கல் செய்து ஜில்லா கலெக்டர் உத்தரவு வரும்வரை நடவடிக்கையை நிறுத்தி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. உத்தரவை நிறைவேற்றியாக வேண்டுமென்று மனுவை நிராகரித்து விட்டார்.

அந்த ரெஞ்சு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் 3-3-50ல் 13 கூரை வீடுகளையும் ஏராளமான ஆட்களைக்கொண்டு பிரித்துமரக் கீற்று, கழிகள் முதலியவைகளை எடுத்துச்சென்று விட்டார்கள்.

வீட்டின் சுற்றுப்புறங்களில் புஞ்சை மகசூல் பயிர் செய்யப்பட்டிருந்ததால், பிரித்த வீட்டின் குட்டிச்சுவர் நிழல்களில் தங்கிக்கொண்டு அந்த மகசூல்களுக்கு பாதுகாப்பாய் இருந்து வசித்து வந்தார்கள். அந்த ரெஞ்சு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்கள் 5-4-50 பிரிக்கப்பட்ட வீட்டின் சுவர்களில் ஒண்டி குடியிருந்து வந்த 13 ஹரிஜன குடும்பத்தார்களையும் வெளியேற்றிவிட்டு கூட அழைத்து வந்த ஆட்களைக்கொண்டு வீட்டின் சுவர்களை இடித்துத் தரைமட்டமாக்கி அதிலுள்ளபுஞ்சை மகசூல்களையும் அழித்து நாசம் செய்து விட்டார்கள்.

இங்குள்ள மிராசுதாரர்களுக்கு கருவியாகப் உபயோகப்படும் அதிகாரிகள் வீடுகளை இடித்து, ஹரிஜன சேவையும் மகசூல்களை அழித்து உணவு உற்பத்தியும் செய்து விட்டார்கள்.

ஜனவரி 26ம் தேதி இந்திய குடியரசுநாடு என்று பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு சர்க்காராக மாறி பிறகும், ஒரு கிராமத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்கள்கூட நிலச்சுவான்தாருக்குத்தான் சொந்தம் என்றும், அதே ஊரில் உழைத்து உணவு உற்பத்தியை பெருக்கும் பரம்பரை ஹரிஜனவாசிகளுக்கு உரிமை இல்லை என்று கூறுவது குடியரசு சர்க்காரின் புது அரசியல் சட்டத்தில் ஒன்று?

இன்னும் சில இடங்களில் இதேபோல் புறம்போக்கு ஸ்தலங்களில் கட்டப்பட்ட ஹரிஜன குடிசைகளைப் பிரிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நிலமில்லா ஏழை ஹரிஜனங்களை புறம்போக்குஸ்தலங்களில் வீடுகட்டிக்கொள்ளலாம் என்று சர்க்கார் அறிக்கை பிரகடனபடுத்தப்பட்டு வீடுகள் கட்டிய பின்னர், வீடு பிரிக்கும் இயக்கம் சர்க்காரே நடத்திவருவது சர்க்காரின் மீது ஜனங்களுக்கு துவேஷம் உண்டாவதை தவிர வேறு என்ன ஏற்படும்.

இந்த நிலைமைமேலும் நீடிக்காமல ஜி. ஓ. 327 22-3-49 சர்க்கார் அறிக்கைபடி புறம்போக்கு ஸ்தலங்களில் வீடுகள் கட்டிக் கொள்ள அடமானம் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமென்று எதிர்பார்க்கிறோம்.

ஸிரியா—சோவியத் வர்த்தகஉடன்படிக்கை?

டமாஸ்கஸ், ஏப். 29—

ஸிரியா—ரஷ்யா இவ்விரு நாடுகளிடையே வர்த்தக உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்வது பற்றி ரஷ்யப்பிரதிநிதியுடன் விவாதிக்கப்பட்டதென்றும், இந்தபேச்சு வார்த்தைகளைக் குறித்து ரஷ்யப் பிரதிநிதி மாஸ்கோவுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார் என்றும், அதற்கும் பதில் வந்த பின் மேற்கொண்டு சம்பாஷணைகள் நடைபெறும் என்று ஸிரிய வெளிநாட்டு மந்திரி குவோப் சிருபரிடம் கூறினர்.

தி.மு.க. தோழர்களுக்கு அறிக்கை

சிற்றூர்களிலோ அல்லது நகரங்களிலோ கிளைக்கழகங்களை நிறுவ விரும்பும் தோழர்கள், அப்பகுதியில் குறைந்தது 25 உறுப்பினர்களையாகிலும் சேர்த்த பின்னரே அவ்வுறுப்பினர்களைக்கொண்டு கிளைக் கழகத்தை நிறுவ வேண்டும்.

அவ்விதம் நிறுவப்படுவதற்குமுன் நகரம் அல்லது மாவட்டக் கமிட்டியின் அனுமதி பெறுதல் வேண்டும்.

காரியக் கமிட்டியின் தீர்மானத்திற்கேற்ப, 1950 ஜூன் மாத இறுதிக்கு மேல் உறுப்பினர் சேர்க்கும் காலம் நீடிக்கப்பட மாட்டது;எனவே மாவட்டக் கமிட்டியினரிடம் இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள கிளைக் கழகத்தினர், சற்றுக்கவனம்செலுத்தி விரைவில் சேர்த்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன்
செயலாளர்
அமைப்புக் குழு,
தலைமை நிலையம்

சிங்கப்பூரிலும் இந்தி!

சிங்கப்பூர் ஏப். 29—

சிங்கப்பூர் சர்க்கார் பள்ளிகளில் இந்தியர் குழந்தைகளுக்கு, ஹிந்தி இரண்டாவது பாடமாக கற்பிக்க வசதிகள் செய்து தர வேண்டுமென்று இந்தியர்கள் கோருவதாகவும், கல்வி அதிகாரிக்கு இது விஷயமாக ஒரு மகஜர்சமர்ப்பிக்க சிங்கப்பூர் இந்திய காங்கிரஸ் ஏற்பாடு செய்து வருகிறது என்றும் காங்கிரஸின் காரியதரிசி தோழர் ஜான் ஜாகோப் கூறினர்.

ஹங்கேரி தலைவர் ராஜிநாமா

லண்டன், ஏப். 20—

ஹங்கேரிய பிரஸிடெண்ட் ஆர்பாத் ஸாகஸிட்ஸ் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். மாஸ்கோவின் நம்பிக்கையை பெறுதநிலைலேயே இவர் விலக நேரிட்டதாகக் கூறப்படுகிறது.

இம்மாதிரி விஷயங்களில் வழக்கமாக கூறப்படும் 'உடல்நலமின்மை' காரணமே இவர் விஷயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

மந்திர சக்திக்கு மாஜிஸ்திரேட் சவால்

மாட்ரிட், ஏப். 29—

மந்திரவாதிகள் என்று சொல்லப்படும் ஒரு ஆணும் பெண்ணும், மாஜிஸ்திரேட் முன்பு ஏதோ குற்றத்திற்காக ஆஜர்செய்யப்பட்டனர். மாஜிஸ்திரேட் அவர்களை விசாரித்துவிட்டு 6 மாத சிறைத் தண்டனை விதித்து இத் தண்டனையிலிருந்து உங்கள் மந்திர சக்தியால் தப்பித்துக்கொள்ளுங்கள் பார்க்கலாம் என்று சவால்விடுத்தார்.

பிரெஞ்சு தூதர் காரியாலயத்தில் களவு!

லண்டன், ஏப். 29—

மாட்ரிட்டிலுள்ள பிரெஞ்சு ஸ்தானீகாலயத்தில் சில திருடர்கள் இரவில் புகுந்து ரூ. 520 எடுத்துச் சென்றனர். ஏதேனும் சில முக்கிய தஸ்தாவேஜூ தேடப்பட்டதாக தெரிந்தபோதிலும் எந்த தஸ்தாவேஜூவும் காணாமற்போகவில்லை.

விடியற்காலையில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்ததைக் கண்டு, போலீஸார் அழைக்கப்பட்டனர். ஆனால் திருடர்கள் எல்லோரும் தப்பிவிட்டனர்.

மே விழாக் கூட்டங்கள்

1-5-50

சென்னை :—சி. என். அண்ணாத்துரை
மதுரை :—அ. சித்தையன்
கோவை :—இரா. நெடுஞ்செழியன்
குரிசிலாப்பட்டு :—சி. பி. சிற்றரசு
கோவில்பட்டி :—ஆசைத்தம்பி
கோலார் தங்கவயல் :—என். வி. நடராசன்
ஈரோடு:— மு. கருணாநிதி, எஸ். அப்பாவு, என். ஈ. பாலகுரு, எஸ். ஆர். சந்தானம், ஆர். பெருமாள்.
திருச்சி —(காலை) க. அன்பழகன், எம். எஸ். மணி, ஜி. பராங்குசம், எஸ். நெடுமாறன்.
பொன்மலை :—(மாலை) க. அன்பழகன், டி. கே. சீனிவாசன்
திருச்செங்கோடு:—என். கே பி. வேல், டி. எம். மகாலிங்கம், அ. நடேசன், அ. சண்முகசுந்தரம, டி. ஏ. ஐயாவு.
மேலக்கற்கண்டார்கோட்டை:—கிருஷ்ணமூர்த்தி.

நோபெல் பரிசு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டத்தில் அடைக்கப்பட்டார். அவ்வம்மையாரின் ஒப்பற்ற கணவர்—அவரும் நோபெல் பரிசு பெற்றவர் அதே காரணத்துக்காக பிரெஞ்சு சர்க்காரால்—மார்ஷல் உதவிக்காக அமெரிக்காவிடம் மண்டியிடும் சர்க்காரால் "டிஸ்மிஸ்" செய்யப்பட்டார்.

புரட்சி செய்தநாடு, புல்லர்களைத் தூக்குமேடைக்கனுப்பிய நாடு சுதந்திரக் கனலை பல நாட்டு ஒடுக்கப்பட்ட மக்களிடையே மூட்டிய நாடு பிரெஞ்சுநாடு இவ்வாறு செய்வதைக் கண்டுகாண் நாம் நெஞ்சம் புழுங்குகிறோம்.

பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சபையில் சரிபாதி கம்யூனிஸ்டு அங்கத்தினர்கள்; அக்காரணத்தால் நிலையான மந்திரி சபையே பிரான்சில் ஏற்படுத்த முடிவதில்லை; சென்ற ஆண்டில் மட்டும் ஏழுதடவை மந்திரிசபை கவிழ்ந்திருக்கிறது, இந்த நிலை ஏதோ ஒன்றிரண்டு ஓட்டுகள் அதிகம் பெற்று 'அட்லி மெஜாரிட்டி' யுடன் அதிகாரத்துக்கு வந்துள்ள பிடால்ட் மந்திரிசபை, கம்யூனிஸ்டுகளை அடக்குமுறைப் பாணங்கொண்டு நசித்துவிட முடியுமென்பது பகற் கனவென்றுதான் கூற வேண்டும்.

அமெரிக்காவுக்கு ஸிரியப் பொருள்கள்

டமாஸ்கஸ், ஏப். 29—

500 டாலர் பெறுமான பொருள்களை அமெரிக்காவுக்குச் சுங்க வரியில்லாமல் அனுப்பலாம் என்பது பற்றி ஸிரிய சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது (குளோப்)

எவரின் மூச்சு ?

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார் கை ?
பொற்றுகளைக் கடல் முத்தை மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்செவரின்மூச்சு

நகரில் மின்சாரக் குறைப்பு

சென்னை, ஏப். 27—

பேஸின்பிரிட்ஜிலுள்ள சர்க்கார் மின்சார நிலையத்தில் ஏதோ பாய்லர் பழுதடைந்துவிட்டதால் எலெக்டரிக் இஞ்ஜினீர் நகரில் அதிகப்படியாக மின்சார சக்தி உபயோகிக்கும் ஸ்தாபனங்கள் மின்சாரசக்தி உபயோகத்தை நாளுக்கு ஆறு மணி நேரம் குறைத்துக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்திருப்பதாய்ச் சொல்லப்படுகின்றது. இவ்விதத் தொல்லையால் நகரில் முக்கியமான ரஸ்தாக்களில் தெரு விளக்குகளை ஒன்றுவிட்டொன்றுதான் எரிப்பதற்கு ஏற்பாடாகியிருப்பதால் பல பாகங்களில் பாதி இருட்டடிப்பு பாவிவிட்டது மற்றும் சிலவிடங்களிலும் வீடுகளுக்கும் அடிக்கடி மின்சாரமில்லாத தொல்லை ஏற்படுகின்றது. ரயில்வே பின்கள் துறைமுகம் முதலியவற்றிலும் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும் மாலை 6 மணி முதல் 9 மணி வரையிலும் மின்சார உபயோகத்தைக் குறைத்துக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. பழுதடைந்த பாய்லர் ரிப்பேராவதற்கு இரண்டு வாரங்கள் பிடிக்குமாம்.

பொறுமை?

" கூழுக்குப் பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ—புவி
வாழ்வதுதான் எந்தத் தேதியோ ?

சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்துத்
தீர்வதும் இந்தஉலகமோ—உரு
அற்றுறுதிறுந்தாலும் நன்றுமே !

காண்பதெல்லாம் தொழிலாளிசெய்தான் அவன்
காணத்தகுந்தது வறுமையாம்—அவன்
பூணத்தகுந்ததும் பொறுமையாம் !"

—புரட்சிக்கவிஞர்

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ. அ. பை.
முன்வரவு (நேற்று வந்துள்ளபடி)	1643—0—6
நேற்றைய வரவில் விடுபட்டது	0—10—0
தி. மு. க. பேளுக்குறிச்சி கிளை	10—0—0
,, —ஆய்க்கவுண்டன்பாளையம் கிளை	10—0—0
,, —ஆனைமலை கிளை	10—0—0
லெனின்மணி, பொம்மேகுப்பம்	5—0—0
டி. டி. குட்புசாமி, குடிபேற்றம்	5—0—0
கே. எஸ். சங்கர், ஆரணி	2—0—0
சி. திருவேங்கடசாமி, சின்னகாஞ்சிபுரம்	1—0 0
டி. கே. கோவிந்தசாமி, திருப்பத்தூர் (வ-)	5 0—0
வி. எஸ். பி. மணி, ,,	5—0—0
வி. பி. ராசாபாதர், ,,	2—0—0
டி. எஸ். லட்சுமணன், ,,	1—0—0
ஜி. ராமலிங்கம், ,,	1—0—0
வி. ரங்கசாமி, ,,	1—0—0
டி. வாசுதேவமுதலி, ,,	1—0—0
எஸ். எம். முகம்மதுஜக்ரியா, ,,	1—0—0
கே. பி. தங்கவேலு, ,,	1—0—0
ஏ. எம். முனிராஜு, ,,	1—0—0
ட. ஆர். கனஜா, ,,	1—0—0
ஜி வெங்கடாசலம், ,,	1—0—0
டி. ராமசாமி, ,,	1—0—0
சி. ஆர். ஏ. இளம்பிறை, ,,	1—0—0
ஜே. குப்புசாமி, ,,	1—0—0
டி. ஜி. தொட்டப்பன், ,,	0—8—0
டி. ஏ. ரத்தினசபாபதி, ,,	0—8—0
பி. முருகேசன், ,,	0—8—0
பி. ஞானசம்பந்தன், ,,	0—8 0
எஸ். நஞ்சப்பன், ,,	0—8—0
பி. சி. சின்னுராவ், ,,	0—8—0
எம். முனிசாமி, ,,	0—8—0
கே. முனுசாமி ,,	0—8—0
சி. ஆர். ஜி. தியாகராஜன், ,,	0—8—0
சி. ஆர். எம். கந்தசாமி, ,,	0—8—0
எம். இளவழுதி, ,,	0—8—0
டி. பி. தங்கவேலு, ,,	0—8—0
ஏ. நடராசன் ,,	0—8—0
டி. எம். கோவிந்தசாமி, ,,	0—8—0
எம். ஏ. அருணகிரி, ,,	0—8—0
சி. கே. சின்னமணி, ,,	0 8—0
டி. கே. ராமசாமி, ,,	0—8—0
டி. ஆர். ராமச்சந்திரன், ,,	0—8—0
சி. எம். எஸ். பாலு, ,,	0—8—0
பரமசிவம், ,,	0—8—0
ஆர். எஸ். மணி, ,,	0—8—0
பி. ராமதாஸ், ,,	0—8—0
டி. ஆர். அருணாசலம், ,,	0—8—0
ஆர். கிருஷ்ணன, என். கே. வி. மூர்த்தி,	0—8—0
ஆய்க்கவுண்டன்பாளையம் தோழர்கள்	4—8—0
தி. மு. க.—மதுரை நகரக்கிளை பொதுக் கூட்டத்தின் மூலம் வரவு	34—0—0
	1760—12 6

கூட்டுறவுக்கு பிரிட்டிஷ் அதிகாரியின் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப். 26—

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரின் தகவல் அதிகாரியான கமாண்டர் ஆர். டி. ஹோல் என்பவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சமூக முன்னேற்றச் சங்கங்களையெல்லாம் மூன்று நாள் சுற்றுப்பிரயாணம் செய்து பார்வையிட்டார். யாழ்ப்பாண டிஸ்டிரிக்ட் சமூக முன்னேற்றச் சங்கங்களின் தலைவர் முதலியார் சி. இராசநாயகம், ஸ்தாபன சர்க்காரின் உதவிக் கமிஷனர் தோழர் டி. ராஜேந்திரா ஞானசேகர் தோழர் எஸ். பஞ்சரத்தினம் ஆகியோர் தோழர் ஹோலை காங்கேசன்துறை விமான நிலயத்தில் சந்தித்து வரவேற்றனர்.

மானிப்பாய் சமூக முன்னேற்றச் சங்கத்தில் தோழர் ஹோல் பேசுகையில் "எனது சுற்றுப் பிரயாணத்தின் போது கண்ட மாண சமூக முன்னேற்றச் சங்கங்களிடம் நான் கண்ட உற்சாக உழைப்பும், கூட்டுறவு மனப்பான்மையும் எனது உள்ளத்தில் பெரிதும் மகிழ்ந்தனை" என்று கூறினர்.

பிரெஞ்சுப் படை உப தளபதி சுட்டுக் கொல்லப்பட்டார்

சைகோன், ஏப். 28—

தெற்கு வியட்நாமில் பிரெஞ்சு பாதுகாப்புப் படையினின் உதவித் தளபதியாக இருக்கும் மாஜின் இன்று தனது காரில் சவாரியில் சுடப்பட்டார்.

அவரைச் சுட்டவன் வியட்மின் (கம்யூனிஸ்ட்) அங்கத்தினர்களில் ஒருவனாக இருக்கவேண்டுமென நம்பப்படுகிறது. அவன் மேலும் இவர்களுடன் கூடி கார் ஒன்றில் ஏறி தப்பியோடி விட்டான்.

அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். ஆனல் அங்கு அவர் இறந்துவிட்டார்.



23—4—50 ஞாயிறன்று மாலை சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் நடைபெற்ற தி. மு. கழக மாபெரும் பொதுக்கூட்டத்தின் ஒரு பகுதியின் போதுத்தோற்றம்

இனி நடப்பவை

திருச்செங்கோடு:—1—5—50 மாலை 6 மணிக்கு 40 கால் மண்டபத்தின் முன் ஓர் பொதுக் கூட்டம் தி. மு. க. சார்பாக நடைபெறும். அதுபோது பாட்டாளிகளின் தினமான "மே" தினம் என்பதைப் பற்றி தோழர்கள் என். கே. பி. வேல், டி. எம். மகாலிங்கம், அ. நடேசன், அ. சண்முகசுந்தரம், டி. ஏ. ஐயாவு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மேலக்கருக்கண்டார்கோட்டை:—1-5-50 காலை 8 மணிக்கு தி. மு. க. மைதானத்தில், கழகக் கொடியைத் தோழர் கிருட்டிணமூர்த்தி அவர்கள் "மே" நாள் நினைவாக ஏற்றி வைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

* * *

சோமனபுரம்:—1-5-50 இரவு 8 மணிக்கு தி. மு. கழகக் கூட்டம் செல்வம் என்பவரின் கடையில் நடைபெறும். அதுபோது சென்றஆண்டு வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்யவேண்டியிருப்பதாலும், இவ்வாண்டிற்கு நிர்வாகஸ்தர் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதாலும் உறுப்பினர்கள் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

* * *

திருச்சி:—1-5-50 காலை 8 மணியளவில், நகரக்கிளை சார்பில் மே தின விழாவும், தி. மு. கழகக் கொடியேற்று விழாவும் கருணாநிதி பூங்கா அருகாமையில் உள்ள அழகிரி திடலில் நடைபெறும் அதுபோது தோழர்கள் க. அன்பழகன், எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், ஜி. பராங்குசம் முதலியோர்கள் மே தினமும், மனித நோக்கமும் என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஈரோடு:—1—5—50 மாலை 7 மணிக்கு இவ்வூர் டவுன் ஸ்கூல் மைதானத்தில் தி. மு. க. சார்பாக தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் மே தின விழா பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, எஸ். அப்பாவு, என். ஈ. பாலகுரு, ஆர். பெருமாள் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

பொன்மலை:—1—5—50 மாலை 6 மணிக்கு திராவிட வாலிபர் கழக 9 வது ஆண்டுவிழாவும், மே தின விழாவும் பொன்மலைப்பட்டி மாவு மில்லுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் அழகிரி திடலில் தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் டி. கே. சீனிவாசன், க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

கோவை:—மே தின விழாப் பொதுக்கூட்டம், 1—5—50 மாலை 6-மணிக்கு தெப்பக்குளம் வீதி மைதானத்தில் நடைபெறும் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். ஏ. ராசமாணிக்கம், எம். கட்டிலிங்கம் மற்றும் பலர் "தொழிலாளர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை. தேனாம்பேட்டை:—நாடகக் கழகத்தின் சார்பில் 30—4—50 மாலை, 6 மணிக்கு காங்கிரஸ் மைதானத்தில் 'நாம் இருவர்' நாடகம் நடைபெறும்.

* * *

சென்னை திருவல்லிக்கேணி:—தி. மு. கழகத்தின் சார்பில் 1-5-50 காலை 9 மணிக்கு சாலைமாக் 2வது தெருவில் தோழர் திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் மேவிழா நடைபெறும், தோழர்கள், கா. மு. கணேசன், செ. அரசமகன், சீல நாராயணன் முதலியோர் பேசுவர்

கென்யாவில் கலவரம்

24 பேர் உயிரிழந்தனர்

மூன்று ஆங்கில உத்தியோகஸ்தர்களையும், ஒரு ஆப்பிரிக்கப் போலீஸ் கான்ஸ்டேபிளையும், பொது மக்களில் 20 பேரையும் கடமேற்கு கன்யாவில் நடந்த ஒரு கலவரத்தில் சுதேசிகள் கொன்றனரென்று இன்று தெரிவிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அநேக தொந்தரவுகட்கும் காரணமாயிருந்த ஒரு தடைசெய்யப்பட்ட மதாபிமான சமயச் சங்கத்தின் தலைவரைச்சிறை செய்யச் சென்றபோது, லேக்பாரிங்கோ பகுதியில் சுதேசிகளோடு ஏற்பட்ட சண்டையில் இவர்கள் கொல்லப்பட்டனரென்று உத்தியோகப்பூர்வமான அறிக்கையொன்று கூறுகிறது. சமயத் தலைவரைக் கைது செய்வதைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடக்கும்போதே சுதேசிகள் போலீசாரைத் தாக்கினர்.

ஈட்டிகள் அபரிமிதமாய் வீசப்பட்டதால், போலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அப்பொழுது மாண்ட சுதேசிகளில், கைது செய்யப்பட வேண்டிய சமயத் தலைவரும் ஒருவர்.

சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு உதவி உடனே அனுப்பப்பட்டது. சிறிது நேரத்தில் கிளர்ச்சி அடங்கி விட்டது.

மே தின விடுமுறை

1—5—50 திங்கட்கிழமையன்று மே தின விடுமுறை காரணமாக, அன்றையதினம் "மாலைமணி" வெளி வராது என்பதை, வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

தெ. ஆ. இந்திய காங்கிரஸ் எதிர்ப்பு

தென்னாப்பிரிக்க யூனியன் சட்டசபையில் கொண்டுவரவிருக்கும் தனித் தொகுதி அமைப்பு மசோதாவை நிறுத்திவிடுமாறு, தென்னாப்பிரிக்க இந்தியர் காங்கிரஸ் டர்பனிலிருந்து ஐ. நா. சபைக்கு இன்று அனுப்பிய ஒரு தந்தியில் கேட்டுள்ளது. தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் போக்கு பேர்ல் ஹார்பர் சம்பவத்தில் ஜப்பான் நடந்துகொண்ட மாதிரி புள்ளது என குறித்த தந்திச் செய்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா தென்னாப்பிரிக்க யூனியனை நிறவாரியாகப் பிரித்து அமைக்க வழி கோலுகிறது என, தென்னாப்பிரிக்க காங்கிரஸ் தலைவர் டாக்டர் ஜி. எம். நாயக்கர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார். அதுவுமல்லாமல், தென்னாப்பிரிக்க சிறுபான்மை இந்தியர்கள் நடத்தப்படும் முறையை விட்டு 1949 மே மாதத்தில் ஐ. நா. சபை செய்து கொண்ட ஒப்பந்தத்தை இது மீறுவதாயிருக்கிறது என்றும், ஐ. நா. சபை கேட்டுக்கொண்ட பிரகாரம் இந்தியா-பாகிஸ்தான் அரசாங்கங்களோடு ஒரு வட்டமேசை மாநாடு கூட்ட சம்மதித்த தெ. ஆ. யூனியன் அதே சமயத்தில், இம்மாதிரி எக்காலத்திலுமே கையாளப்படாத ஒரு ஒதுக்கல் மசோதாவைக் கொண்டுவர என்னுவது ஜப்பானின் பேர்ல் ஹார்பர் நடத்தையைத் தான் ஞாபகப்படுத்துகிறது என அவர் சொன்னார்.

தென்னாப்பிரிக்க உள் நாட்டு மந்திரி டாக்டர் டொன்ஜேஸ் யூனியனின், வகுப்பு ஒற்றுமை ஏற்பட தனித் தொகுதி அமைப்பு அதாவது ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும், நிற வகுப்பினருக்கும், ஆப்பிரிக்கருக்கும் தனித் தனி தொகுதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென ஏப்ரல் 21-ல் இந்த மத்திய பிரேரணைக்கு பார்லிமெண்டில் ஒரு முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.